**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**
முன்னிலை:– **திருமதி. S.ஆனந்தவல்லி,B.A.,B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை.
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் நாள் திங்கள்கிழமை
இடைநிலை மனு எண்.9/2025
உள்
அசல் வழக்கு எண்.5/2011

தும்முசின்னம்பட்டி இராமலிங்க
சன்னியாசி தருமபரிபாலன மடம்
அதன் டிரஸ்டி கருப்பசாமி மூலம் ...... மனுதாரர்/வாதி

**/எதிரிடை/**

1. மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை
அதன் மேனேஜிங் டிரஸ்டி,
திரு.Y.டேவிட் மூலம் (இறப்பு)
2. குமரையா
3. S.முத்துப்பாண்டி
4. N.சீராளன்
5. 2 நிர் கிளை சார்பதிவாளர், விருதுநகர்
6. மாவட்ட பதிவாளர்
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர் ...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 28.10.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 17.11.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.M.விஜயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி இறந்து விட்ட நிலையிலும், 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பதில் வழக்கறிஞர்

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

திரு.P.கந்தசாமி அவர்கள் முன்னிலையாகி மறுப்புரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளார். 3, 4 எதிர்மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 5,6 எதிர்மனுதாரர்கள்/5,6 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக ஆகியுள்ள நிலையிலும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

**உத்தரவு**

1ம் பிரதிவாதியின் இறப்பு பற்றி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி கோரி உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 17 பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:-

1ம் பிரதிவாதியான மக்கள் மேம்பாட்டு அறக்கட்ளை டிரஸ்ட், அதன் மேனேஜிங் டிரஸ்டி திரு.ஒய்.டேவிட் என்பவர் வழக்கு தாக்கலுக்குப் பின்னர் 21.11.2016ம் தேதி இறந்துவிட்ட காரணத்தால், அவருக்கு பதிலாக புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டிரஸ்டியை இந்த வழக்கில் சேர்க்க வேண்டி (For Steps) என வாய்தா ஏற்பட்டு இருந்த நிலையில் மேற்படி மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை டிரஸ்ட் செயல்படாலும், மேற்படி டிரஸ்டி இறந்து போன Y.டேவிட் அவர்களுக்குப் பின்னர் யாதொரு டிரஸ்டியும் மேற்படி அறக்கட்டளைக்கு தேர்வு செய்யப்படாமலும், 1ம் பிரதிவாதி டிரஸ்ட்க்கு பதிலாக புதிய டிரஸ்யை நிலுவையில் உள்ள இந்த வழக்கில் ஒருதரப்பினராக சேர்க்க இயலவில்லை என்ற விபரத்தை, மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் சீர்திருத்தம் செய்ய வேண்டி இந்த மனு தாக்கல்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

3. <u>3,4 எதிர்மனுதாரர்கள்/3,4 பிரதிவதிகள் தாக்கல் செய்து, 4 எதிர்மனுதாரர்/4 ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுப்புரையின் சுருக்கம்:</u>–

(1) மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளையானது 02.09.1981 ம் தேதி திரு.பு.டேவிட் அவர்களால் இயற்றப்பட்டு 12.10.1981 ம் தேதி மதுரை மாவட்டம், தல்லாகுளம் சார்பதிவக ஆவண எண்.168/1981 ன் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்பு அதை ஏற்படுத்திய திரு.பு.டேவிட் அவர்கள் திரு.மாரிச்செல்வம் மற்றும் திரு.பிராஸ்க்ளின் ஆகியோர்களை டிரஸ்டிகளாக நியமனம் செய்து அவர், மேற்படி டிரஸ்டின் மேனேஜிங் டிரஸ்டியாக தொடர்ந்தார். பிற்பாடு திரு.ஃப்ராஸ்களின் அவர்கள் 25.06.2014 ம் தேதி ராஜினாமா செய்து விட்டார். பின்பு மேனேஜிங் டிரஸ்டியான திரு.பு.டேவிட் அவர்கள் திரு.கே.பிச்சாண்டி என்பவரை 18.02.2015 ம் தேதி கூட்டத்தில் தீர்மானம் இயற்றி டிரஸ்டியாக நியமனம் செய்தார்.

(2) பிற்பாடு திரு.பு.டேவிட் அவர்கள் திரு.கே.பிச்சாண்டி என்பவரை 18.02.2015 ம் தேதி கூட்டத்தில் தீர்மானம் இயற்றி டிரஸ்டியாக நியமனம் செய்தார். பிற்பாடு திரு.பு.டேவிட் அவர்கள் 21.11.2016 ம் தேதி இறந்துவிட்டார். எனவே திரு.பிச்சாண்டி அவர்கள் ஒருமனதாக 07.12.2016 ம் தேதி கூட்டத்தில் தீர்மானம் இயற்றி மேனேஜிங் டிரஸ்டியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிற்பாடு அவர் திரு.என்.கோபாலகிருஷ்ணன் என்பவரை ஒரு மனதாக நடத்த கூட்டத்தில் தீர்மானம் இயற்றி தேர்ந்தெடுத்தார். தற்போது மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளையின் மேனேஜிங் டிரஸ்டி திரு.கே.பிச்சாண்டி என்பவர் ஆவார். பி.மரியசெல்வம் என்வர் Financial Trustee ஆவார். திரு.N.கோபாலகிருஷ்ணன் என்பவர் டிரஸ்டி ஆவார்.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

(3) வாதி எதிர்மனுதாரர்கள் மீதும், 1ம் பிரதிவாதி மீதும் மற்றும் வேறு சில நபர்கள் மீதும், கமுதி தாலுகாவில் உள்ள சில சொத்துக்கள் சம்மந்தமாக முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.9/2021ல் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி டிரஸ்டி பெயர் பிச்சாண்டி என குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த விபரங்களை எல்லாம் மறைத்து புதிதாக எந்த டிரஸ்டியும் தேர்வு செய்யப்படவில்லை என அபிடவிட்டில் கூறி இருப்பது முழுபூசணிக்காயை சோற்றில் மறைப்பதாகும். மனுதாரர் சுத்தமான கரங்களுடன் இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டியது.

2ம் எதிர்மனுதாரர தரப்பில் 03.11.2025ம் தேதியில் மறுப்புரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u> :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?, இல்லை? என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டியது ஆகும்.

<u>தீர்வு</u>:–

(5) மனுதாரரின் மனு மற்றும் 3, 4 எதிர்மனுதாரர்களின் மறுப்புரை பரிசீலிக்கப்பட்டது.

(6) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. 3, 4 எதிர்மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

(7) இருதரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 1ம் பிரதிவாதியான மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை அதன் மேனேஜிங் டிரஸ்டி டேவிட் என்பவர் 21.11.2016ம் தேதி இறந்துவிட்டார் என்பதால் அதனை பொறுத்து பிராதை சீர்திருத்தம் செய்ய மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டிரஸ்டி டேவிட் இறந்த பிறகு அவருக்கு பதிலாக புதிய டிரஸ்டி தேர்வு செய்யப்படாமலும் டிரஸ்ட் செயல்படாமலும் உள்ளது என்றும், அதனால் 1ம் பிரதிவாதியின் இறப்பு பற்றி பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

(8) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மறுப்புரையில் 18.02.2025ம் தேதிய கூட்டத்தில் தீர்மானம் இயற்றி திரு.K.பிச்சாண்டி என்பவர் டிரஸ்டியாக இருந்து வருவதாகவும், இந்த மனுதாரர்/வாதி 1ம் பிரதிவாதி மீதும் வேறு சில நபர்கள் மீதும் முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.9/2021–ல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் 1ம் பிரதிவாதி டிரஸ்டி பெயர் பிச்சாண்டி என குறிப்பிட்டுள்ளார் ஆனால் அதையெல்லாம் மறைத்து புதிதாக எந்த டிரஸ்டியும் தேர்வு செய்யப்படாமல் இருப்பதாக கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சபேணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9) அசல் வழக்கு எண். 9/2021–ன் பிராது நகல் மறுப்புரையுடன் தாக்கல் செய்யப்பட்டு எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 21.11.2016ம் தேதி 1ம் பிரதிவாதியான மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை அதன் மேனேஜிங் டிரஸ்டி திரு.டேவிட் இறந்துவிட்டார். ஆனால் இன்றைய தேதி வரை பிராது சீர்திருத்தம் செய்யப்படவில்லை. இந்த வழக்கின் தொடர்புடைய மற்றொரு வழக்கான அசல் வழக்கு எண்.92/16–ல் 1ம்பிரதிவாதி டேவிட் இறப்பு பதிவு

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

செய்து அவருடைய வாரிசுகள் சேர்த்து பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு வழக்குகளிலும் வாதி ஒன்றுதான். ஆனால் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி இறப்பை பொறுத்து பதிவு செய்யாமல் இருந்து வந்து தற்போது நீதிமன்றம் அதனை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட பிறகு இந்த மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1–ஐ பார்க்கும் போது 2021ம் வருடம் இந்த மனுதாரர்/வாதியால் இந்த 1ம் பிரதிவாதி மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை அதன் மேனேஜிங் டிரஸ்டி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை அதன் மேனேஜிங் டிரஸ்டி K.பிச்சாண்டி என்பவரின் பெயரை குறிப்பிட்டு வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எ.ம.சா.ஆ.1–ஐ பார்க்கும் போது தெரியவருகிறது.

(10) மேலும் எ.ம.சா.ஆ.1–ல் 10வது பராவில் தற்போது மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை அதன் மேனேஜிங் டிரஸ்டியான 1ம் பிரதிவாதி பிச்சாண்டி என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதியால் மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை டிரஸ்டியாக கே.பிச்சாண்டி இருந்து வருகிறார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த விபரங்களை எல்லாம் மறைத்து புதிதாக எந்த டிரஸ்டியும் தேர்வு செய்யப்படவில்லை டிரஸ்ட் செயல்படவில்லை என்று இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(11) எதிர்மனுதாரர்கள் மறுப்புரையில் சொல்லியுள்ள 1ம் பிரதிவாதி அறக்கட்டளை பிச்சாண்டி என்பவர் மூலம் செயல்பட்டு வருகிறது என்பதற்கு ஆதரவாக எ.ம.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரே பிச்சாண்டி தான் டிரஸ்டி என ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே மனுதாரர்/வாதி 1ம் பிரதிவாதி மேம்பாட்டு டிரஸ்டி டேவிட் இறந்துவிட்டார் வேறு டிரஸ்டி

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

நியமிக்கப்படவில்லை. டிரஸ்ட் செயல்படவில்லை என பிராதை சீர்திருத்தம் செய்ய கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்தல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(12) ஆகவே டேவிட் இறந்துவிட்டார் என்பதை பதிவு செய்து எ.ம.சா.ஆ.1–ன் படி புதிய டிரஸ்டியாக செயல்பட்டு வருவதாக சொல்லும் பிச்சாண்டி என்பவரை 1ம் பிரதிவாதியாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்வது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட விவதாங்களிலிருந்து 1ம் பிரதிவாதியை பொறுத்து சீர்திருத்தம் செய்ய மீண்டும் மனு செய்ய மனுதாரருக்கு liberty–அளித்து இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானித்து மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**இறுதியாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.

மேற்படி உத்தரவு என்னால் சொல்லப்பட்டு. சுருக்கெழுத்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் பகரப்பட்டது.

ANANTHAVALLI S    Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை.

**<u>3,4 எதிர்மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள சான்றாவணம்</u>**:–

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | ––––– | மாண்புமிகு இராமநாதபுரம் மாவட்டம் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.9/2021–ன் பிராது சான்றிட்ட நகல் |

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

––––––––––––––––––––––––
மு.மா.உ.நீ. அருப்புக்கோட்டை,
இடைநிலைமனு எண்.9/2025
உள்
அசல்வழக்கு எண்.5/2011

சீரான/வரைவு உத்தரவு
நாள் 17.11.2025
––––––––––––––––––––––––